# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.19/2024

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-1 |
| Name | : சந்திரசேகரன் |
| Father's / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 12th day of November 2025.

**1 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் SMC line, குகை, சேலத்தில் குடியிருந்து வருகிறேன். சேலம் மாநகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 07.00 மணியளவில் நான் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஜெயா தியேட்டர் அருகில் உள்ள டீக்கடைக்கு டீ குடிக்க சென்றிருந்த போது TN 54 7756 என்ற வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததில் இடது கையில் எனக்கு அடிபட்டுவிட்டது. அருகில் இருந்தவர்கள் என்னை

சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு போலிசார் செவ்வாய்பேட்டை காவல் நிலையத்திலிருந்து வந்திருந்தார்கள், கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன்.

(ஆவணங்களை பரிசீலனை செய்வதற்காக அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.